


சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 வது வட்டத்தில் கழக பவள விழா ஆண்டின் முப்பெரும் விழாவை முன்னிட்டு 30/10/2024 புதன்கிழமை வட்டக்கழகச் செயலாளர் எஸ்.சசிகுமார் முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை(ம) சென்னை பெருநகர வளர்ச்சித் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 150 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் எஸ்.தமிழ்ச்செல்வி, ஆ.சேதுராமன், கே.முருகா, செழியன், வே.டில்லிராஜ், எம்.என்.செந்தில், சரவணன், கே.புருஷோத், கே.குள்ளா, அ.குருமூர்த்தி, பட்டா.எஸ்.எல். நாராயன், அபு.அ.கார்த்திகேயன், தருண்ஜெயபால், ஸ்ரீதர், ராஜன், ஹரிதாஸ், வினோத், நாகு மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சைதை மேற்கு பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பத்தாவது மண்டலத்தில் உள்ள 142வது வார்டில் சலவையாளர் காலனி குடியிருப்பு பகுதியில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குறைந்த மின்னழுத்தம் காரணமாக ஏற்படும் தடை மின்பற்றாக் குறையை போக்கும் வகையில் 100 கிலோ வாட் மின்மாற்றியை மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பகுதி துணை செயலாளர் ஆர். ரமேஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.வெங்கடேசன், பகுதி பிரதிநிதி கேபிள் முருகன் உள்ளிட்ட கழக தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.





### டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

## அம்பத்தூரில் கழக கருத்தியல் பேச்சரங்கம்!

### பர்வின் சுல்தானா - தஞ்சை கோ.வியானி விஷ்வா - அ.தா.டெக்சின் சிறப்புரை!

### பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை!

சென்னை, நவ.2-

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் என் உயிரினும் மேலான.... பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சி வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க அம்பத்தூர் சட்டமன்ற திமுக சார்பில் என் உயிரினும் மேலான.... பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சி நாளை (03.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் உள்ள பி.எஸ்.பி கன்வென்ஷன் மஹாலில் (PSB CONVENTION MAHAL) அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு கழக பொருளாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடகிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியாண்டி, த.செ.கு.உறுப்பினர், அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி.இராஜகோபால் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் மரு.அணி. அமை ஜி.சாந்தகுமாரி த.செ.கு.உ. ரமேஷ்(எ)நீலகண்டன், மா.ஆதி.நல.அ எல்.பி.எப்.மோகன் த. பொது.கு.உ ஏபி.பூர்ணிமா எம்.சி., மா.மீனவ.அமைது.ஆயிரம், மா.அமைப்பு சாரா ஒட்டுநர்.அ.அ கு. கி ரு ஷ் ண மூ ர் த் தி , மா.இ.அ.து.அ ஜெ.பாலமுருகன் மற்றும்

அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா.இரமேஷ், வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா வெ.இராதாகிருஷ்ணன் மு.இரகு, எம். கமல் எம்.சி, மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி, எஸ்.உமா சந்தானம் எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி., ஆகியோரின் முன்னிலையில் அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி க.ஜீவா, எஸ்.பி. அரிகிருஷ்ணன், மா. குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ.இரா,அருண், கோ.சேகர்லால் ஆகியோரின் வரவேற்பில் இக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் முனைவர் பர்வின் சுல்தானா, திராவிட மாடலே தேசத்தின் தீர்வு - தஞ்சை ஜோ. வியானி விஷ்வா, எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் எப்போதும் வெற்றியைப் படைக்கும் அ.தா. டெக்சின் ரொமேரியோ ஆகியோர் பங்கேற்று பேருரையாற்றுகிறார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு தெற்கு மற்றும் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் அம்பத்தூர் தெற்கு, கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பாகநிலை முகவர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அம்பத்தூர் வடக்கு பகுதி 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் நன்றியுரை வழங்குகிறார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

## எழும்பூர் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்!

### தொகுதி பொறுப்பாளர் பி.எம்.யாழினி சிறப்புரை!

சென்னை, நவ. 2

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு, தெற்கு பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம் ,எழும்பூர் சட்டமன்ற தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நாளை (3.11.2024 ஞாயிற்றுக்கிழமை) சச்சிதானந்தம் தெரு, சமூக நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன், சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மணி முடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ். எம்.நாதன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ. மணி, அ.நிர்மலா தேவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பி.எம். யாழினி ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு, தெற்கு பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பகமுகவர்கள், BLC உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் சொ.வேலு,வி. சுதாகர் அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. - கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம் பங்கேற்பு!

## திருவொற்றியூர் மேற்கு பகுதி பாக முகவர்கள் - கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### வை. ம. அருள்தாசன் தலைமை! மு. சிவகுமார், பி. தமிழரசன், டி. சேகர், மு. மாணிக்க வேலன், முன்னிலை!

சென்னை, நவ. 2-

திராவிடப் பேரரசர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம் பங்கேற்கும் பாக முகவர்கள் கழக நிர்வாகிகள் கூட்டம் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் நடைபெறுகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட 1,2,3, (3), ஆகிய வட்டங்களில்(3-11-24) அன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பாக முகவர்கள் - கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் வட்ட கழக செயலாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.

வட்டம் -1 நாள்-03-11-2024, நேரம் -காலை 9.30 மணி, இடம் -காமராஜர் நகர் சமுதாய நலக்கூடம், கூட்டம் ஏற்பாடு : வட்ட கழக செயலாளர் மு. சிவ குமார் எம்.சி,

வட்டம் -2 நாள்=03-11-2024, நேரம் -காலை 10.30 மணி, இடம்- திமுக அலுவலகம் (மன்றம்), கூட்டம் ஏற்பாடு: வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர்.

வட்டம் -3 நாள் =3-11-2024, நேரம் காலை 11.30 மணி, இடம் - வட்ட கழக செயலாளர் அலுவலகம், கூட்டம் ஏற்பாடு வட்டக் கழக செயலாளர் மு. மாணிக்கவேலன்

வட்டம் -(3அ) நாள் - 3-11-2024, நேரம் - காலை 11:30 மணி, இடம்- அன்னை சிவகாமி நகர் மாமன்ற உறுப்பினர் அலுவலகம், வட்ட கழக செயலாளர்கள் பி.தமிழரசன் (எ) தம்பியா எம். சி,

மேற்கண்ட ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட செயாலளார் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீனவர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம், திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஆகியோர் நடைபெற இருக்கின்ற வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் குறித்தும் வருகின்ற காலங்களில் நடைபெறும் தேர்தல்கள் குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்க உள்ளனர்.

அது சமயம் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்! மு.ராசா அறிக்கை!

## கலைஞர் நகர் வடக்குப் பகுதி பி.எல்.ஏ. 2 - பாக முகவர்கள் கூட்டம்!

### வே.உமாகாந்த் - ஏ.எம்.வி.பிரபாகரராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு!

சென்னை, நவ. 2 -

கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு.ராசா தனது அறிக்கை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி (பி.எல்.ஏ-2) கூட்டம் நாளை (3.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு, விருகம்பாக்கம், ஏ.கே. ஆர். மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இதில் சென்னை தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தொகுதிப் பார்வையாளர் வே.உமாகாந்த், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகம் சார்ந்த அனைத்து பாக நிலை முகவர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு.ராசா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில்

## மாதவரம் 17வது வட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

சென்னை, நவ.2-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 17 வது வார்டு சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் என அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் திமுக சார்பில் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதியில் 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி வார்டு அலுவலகத்தில் தூய்மை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், மின்சார ஊழியர்கள், காவலாளிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவர்களுக்கு கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் தீபாவளி திருநாளை முன்னிட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நலத்திட்ட உதவிகள் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி.பாலாஜி, சி.மூர்த்தி, வி.பார்த்தசாரதி, எம்.என்.அஜய் தென்னவன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகபிரியன், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத், கே.ராஜ்குமார், நாகராஜ், பாக முகவர்கள் என்.நாகராஜன், டி.திவாகர், வி.சுமீர், பி. செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் அனைத்து தூய்மை பணியாளர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு போர்வை, இனிப்பு, ரொக்கம் ஆகிவற்றை வழங்கினார்.

மேலும் மாநகராட்சி வார்டு அலுவலகம் அருகே தூய்மை பணியாளர்கள் ராம்கி நிறுவன கண்காணிப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர்கீர்த்தி முன்னிலையில் கழகத்தினர் சேர்ந்து பட்டாசு வெடித்து மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தீயம்பாக்கம் ஜான்சன், பூபாலன், சின்னத்தோப்பு முனிவேல், கதாநாதன், செல்வம், அன்பு, மைக்கேல் ,கார்த்திக், ஏ.பாலகிருஷ்ணன், கோசப்பூர் எம். விஜயன், முனுசாமி, மணிகண்டன், காந்திநகர் டி.சுந்தரம், சாந்தி, எஸ்.தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

தீபாவளி திருநாளை முன்னிட்டு தங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, தங்களுடன் சேர்ந்து பட்டாசு வெடித்து மகிழ்ந்த திமுகவினருக்கு தூய்மை பணியாளர்களும், சுகாதாரப் பணியாளர்களும் மற்றும் மாநகராட்சி ஊழியர்களும், தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சி ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார். 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், முன்னிலையில், சி.மூர்த்தி, வி.பாலாஜி, எம்.என். அஜய் தென்னவன், எஸ். சிவக்குமார், கே. சண்முகப்ரியன், பூபாலன், டி.திவாகர், ஜான்சன், பி.செந்தில், ராம்கி கண்காணிப்பாளர் ஸ்ரீதேவி, மேற்பார்வையாளர் கீர்த்தி, எஸ். தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை திரும்பும் மக்களுக்காக

## காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு ரெயில்!

### நவ. 4-ஆம் தேதி வரை விடப்படுகிறது!!

சென்னை, நவ.2-

சென்னை திரும்பி வரும் மக்களின் வசதிக்காக காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே 4-ஆம் தேதி சிறப்பு ரெயில் இயக்கப்படும் என ரெயில்வே இலாகா அறிவித்துள்ளது.

தீபாவளியை கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளார்கள். இவர்களுக்காக அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

மேலும் தனியார் ஆம்னி பஸ்களும் அதிக அளவில் விடப்பட்டன. ரெயில்களிலும் ஏராளமான மக்கள் சென்றார்கள்.

இன்று முதல் 4-ஆம் தேதி வரை சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன. வழக்கமான பஸ்களும் இயங்கும். இந்த 3 நாட்களில் மொத்தம் 12,848 பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னைக்கு வரக்கூடிய பஸ்கள் அனைத்தும் கிளாம்பாக்கத்துடன் நிறுத்தப்படும். அங்கிருந்து மாற்று வாகனம் பிடித்து பயணிகள் சென்னை நகருக்குள் வருவார்கள்.

இவர்களுக்காக மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் இது போதுமானதாக இருக்காது. குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை மக்கள் அதிக அளவில் புறப்பட்டு திங்கட்கிழமை காலையில் சென்னைக்கு வருவார்கள்.

இவர்களின் நலன் கருதி ரெயில்வே துறை சார்பில் சிறப்பு மின்சார ரெயில்கள் விடப்படுகின்றன. பொதுவாக சென்னை கடற்கரை - தாம்பரம் இடையே அதிக அளவில் மின்சார ரெயில்கள் இயக்கப்படுகின்றன. அதைவிட சற்று குறைந்த அளவில் கடற்கரை - செங்கல்பட்டு இடையே இயக்கப்படுகின்றன.

கிளாம்பாக்கம் பஸ் முனையம் வண்டலூருக்கும், ஊரப்பாக்கம் ரெயில் நிலையத்துக்கும் இடையே அமைந்துள்ளது. கிளாம்பாக்கத்தில் இறங்கும் பயணிகள் சற்று தூரம் நடந்து சென்றுதான் இந்த ரெயில் நிலையங்களை அடைய முடியும்.

ஆகவே கிளாம்பாக்கத்தை அடையும் முன்னரே காட்டாங்கொளத்தூர், பொத்தேரி, கூடுவாஞ்சேரி ஆகிய இடங்களில் மக்கள் இறங்கிக் கொள்வார்கள். அவர்களின் நலன் கருதி நவம்பர் 4-ஆம் தேதி அன்று காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4.30, 5.00, 5.45, 6.20 ஆகிய மணி நேரத்தில் காட்டாங்கொளத்தூரில் இருந்து சிறப்பு ரெயில்கள் புறப்படும். இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர், பெருங்களத்தூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

அதுபோல் தாம்பரத்தில் இருந்து 5.05, 5.40 ஆகிய மணி நேரத்தில் 2 சிறப்பு ரெயில்கள் காட்டாங்கொளத்தூர் வரை இயக்கப்படும்.



தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படியும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனையின்பேரிலும், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் அறிவுறுத்தலின்பேரில் மதுராந்தகம் தொகுதி கருங்குழி பேரூராட்சி வாக்குச்சாவடி பாகமுகவர்கள் (BLA–2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLA–C) பெயர்பட்டியல் தயார் செய்வது குறித்து கிளைக்கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் அவைத் தலைவர் ச.சீனுவாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் கருங்குழி பேரூர் செயலாளர் ஏ.சுந்தரமூர்த்தி, ஏற்பாட்டில் பேரூர் கழக துணைசெயலாளர் டி.ஜி.எஸ். தசரதன் மற்றும் வி.பார்த்திபன் பொருளாளர் எஸ்.செந்தில்குமார் மாவட்ட பிரதிநிதி டி.ஆர்.சங்கர் ஜெ.திருக்காமு கழக கிளைச் செயலாளர்கள் அய்யனாரப்பன், உதயகுமார், பன்னீர்செல்வம், சண்முகம், தினேஷ், தீனதயாளன், தெய்வநாயகம், பிரகாஷ், நந்தகுமார், இராஜாராம், நடராஜா, கார்த்திக், செல்வராஜ்,ரமேஷ், காசிநாதன் மற்றும் கருங்குழி பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.